# சினிமா எக்ஸ்பிரஸ்

1–15 அக்டோபர், 2015

ரூ.15




## சூப்பர் ஸ்டாருக்கெல்லாம் சூப்பர் ஸ்டார்!

# தமிழ் சினிமாவில் புது நிபுணத்துவம்!

**'தனி ஒருவன்' படத்துக்கான தரவுகளை (ஸ்பெஷல் பிராப்பர்ட்டிகள்) சேகரிக்கவும், லாஜிக் ஃபாலோவை மெயின்டண்ட் செய்யவும் தொழில் முறையான நிபுணர்களைக் கொண்ட நிறுவனத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அந்த நிறுவனத்தின் பெயர் 'பிஸிக்ஸ் பிஸினஸ் கன்சல்டன்ட்ஸ்' அதன் நிர்வாக இயக்குநர் வெங்கடேஷ் நாராயணன் இது சம்பந்தமாக விளக்குகிறார்.**

'சாப்ட்வேர் துறையிலும், ஆட்டோ மொபைல் துறையிலும் எம்மைப் போன்ற நிபுணர்கள் கொடி கட்டிப் பறப்பார்கள். எமது வேலையை எளிய வார்த்தைகளில் சொன்னால், சந்தையில் வாடிக்கையாளர்களுக்கு இருக்கக்கூடிய தேவைகளை முன்கூட்டியே அறிந்துகொண்டு அதைத் தயாரிப்பிற்குள் கொண்டு வருவதுதான் எமது வேலை. வாடிக்கையாளர்களுக்கு என்ன தேவை என்பதை ஆய்வு மூலம் அறிந்துகொண்டு, அதன் அடிப்படையில் தயாரிப்பைச் செய்யும்போது, அது இலகுவாக நுகர்வோரைக் கவர்ந்து விடும். இல்லையா...? இதுதான் எமது நிறுவனத்தின் அடிப்படை. முதல் முறையாக சினிமாவில் 'தனி ஒருவ'னில் இதை உபயோகித்துள்ளோம்.

**மோகன் ராஜாவின் அறிமுகம்...**
எமது சேவை சினிமாவில் எப்படிப் பயன்படும் என நாம் தேடிக்கொண்டிருந்த அதே வேளையில், இயக்குநர் மோகன் ராஜாவும் இது சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்தார். 2013 ஜனவரியில், நாங்கள் சந்தித்துக் கொண்டோம். ராஜாவிடம் எங்கள் சேவை எப்படி இருக்கும் என்பதைத் தெளிவுபடுத்தினோம்.

**அதை எங்களுக்கும் தெளிவு படுத்தலாமே...**
பொதுவாக ஒரு சினிமாவிற்குத் தேவைப்படும் தரவுகளை கலை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள்தான் சேமித்துக் கொடுப்பார்கள். இதனால், சினிமா உலகில் ஒரே மாதிரியான தரவுகள்தான் சுற்றிக் கொண்டுள்ளன. பல படங்களில் உள்ள தரவுகள் எல்லாமே மற்றைய படங்களில் இருந்து எடுக்கப்பட்டவையாகவே இருக்கும். அதனாலேயே ஒரே மாதிரியான தரவுகளே தமிழ் சினிமாவில் புழக்கத்தில் உள்ளன. போலீஸ் படம் என்றால் அதில் வரும் காட்சிகள் எல்லாமே ஒன்றுபோல அமைய இதுதான் காரணம். மற்ற படங்களில் இருந்ததை ரிப்பீட் செய்யக் கூடாது என்பதில் இயக்குநர் மோகன் ராஜா தெளிவாக இருந்தார். பல புதிய தரவுகளைக் கொடுத்த தன் மூலமாக நாம் அவருக்கு உதவி செய்தோம்.

**அப்படி என்னென்ன தரவுகள் சேமித்துக் கொடுத்தீர்கள்..**
பல இருந்தாலும் ஒன்றை உதாரணமாகச் சொல்லலாம்... போலீஸ் அகாடமி பரிசளிப்பு விழாவில், அரவிந்த்சாமி, ஜெயம் ரவிக்கு துப்பாக்கி ஒன்றைப் பரிசளிப்பார். பின்பு அந்த துப்பாக்கியில் உள்ள கை ரேகையைக் கொண்டே அரவிந்த்சாமிதான் குற்றவாளி என ரவி நிரூபிப்பார். சிறந்த மாணவனுக்கு துப்பாக்கியைப் பரிசளிக்கும் நிகழ்வானது 'நேஷனல் போலீஸ் அகாடமி'யில் வருடம் தோறும் நடந்து வருகிறது. ஆனால், இதுவரை எந்த தமிழ்ப் படமும் அதைக் காட்சிப் படுத்தவில்லை. போலீஸ் அகாடமி சம்பந்தமாக ஆழமாக ஆய்வு செய்து நாம் அதைக் கண்டறிந்தோம். அரவிந்த்சாமியை குற்றவாளி என நிரூபிக்க இந்தக் காட்சி உதவும் என்ற லாஜிக்கை மனதில் வைத்தே அந்தக் காட்சியை பரிந்துரை செய்தோம். இதற்காக 'நேஷனல் போலீஸ் அகாடமி'யில் இருந்து புத்தகங்களை வரவழைத்துப் படித்தோம். ரியலாக போலீஸ் பயிற்சிகள் எப்படி நடக்கின்றன என்பதை தெரிந்து வந்து சொன்னோம். பல ஐ.பி.எஸ். ஆபீசர்கள் படம் பார்த்துவிட்டு எங்களது பயிற்சி நாட்களை அப்படியே படம் பிடித்தது போலவே இருந்தது



எனப் பாராட்டினார்கள்.

**வேறு எப்படியெல்லாம் படத்திற்கு உதவி செய்தீர்கள்...**

1990 இல் இருந்து 2015 வரையான 25 வருடங்களில் எப்படியான குற்றங்கள் நடைபெற்றன என்பதை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறினோம். அதைக் கனிமத் தொழிலில், சுரங்கத் தொழிலில், சுகாதாரத் துறை என 22 துறைகளில் அடக்கலாம். அவற்றை ஆதாரங்களுடன், புள்ளி விபரத்துடனும் கூறினோம். அதில் பிரதானமான மூன்று குற்றம் நடைபெறும் துறைகளை ராஜா தேர்ந்தெடுத்தார். பின்பு அந்தக் குற்றங்களுக்கிடையான தொடர்புகளை வரைவு மூலமாகத் தெரியப்படுத்தினோம். ஆதன்டிக்கான டேட்டாவை சரி பார்த்ததுடன், அதன் லாஜிக்கில் எந்தத் தப்பும் வராமல் பார்த்தோம். நிறையத் தகவல்கள் சேர்ந்து ஆவணப்படம் போலாகி விடக்கூடாது என்பதிலும் தெளிவாக இருந்தோம். 'தனி ஒருவன்' படத்தில் நிறைய தகவல்கள் உள்ளதாக பலரும் பாராட்டுகிறார்கள். இதற்கு எங்களின் கடின உழைப்பும் காரணமாகும்.



**தயாரிப்பாளர் என்ன சொன்னார்...**

நானும் இயக்குநர் மோகன் ராஜாவும்தான் வேலை சம்பந்தமாக நம்பிக்கையாக இருந்தோம். எனது பக்கம் இருந்து கூட 'சினிமாவிற்கு நாம் தேவைப்படுவோமா...?' என்பது போன்ற சந்தேகமான கேள்விகள் எழுந்தன. ராஜாவும் தனது பக்கம் நிறையப் பேர்களை சமாதானப் படுத்த வேண்டி இருந்தது. உதவி இயக்குநர்களால் கொடுக்க முடியாத எதை இவர்கள் கொடுத்து விடப்போகிறார்கள்... என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. முதல் தடவை என்பதால் இப்படிப் பட்ட கேள்விகளை எதிர் கொண்டுதானே ஆக வேண்டும்....? 2013 நடுப்பகுதியில் தயாரிப்பாளர் கல்பாத்தி அகோரம் அவர்களுக்கு ஒரு பிரசன்டேஷன் செய்தோம். படத்தின் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரைக்கும் எப்படியாக இருக்கும் என்பதையும், படத்தை மொத்தம் 15 பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகமும் எப்படி இருக்கும் என்பதையும் விரிவாக விளக்கினோம். சினிமாவில் முதல் தடவையாக இப்படியான உழைப்பைப் பார்க்கிறேன் எனக் கூறி சந்தோஷப்பட்டார் அவர்.

**நீங்கள் திரட்டிக் கொடுத்த எல்லாத் தகவல்களையும் உபயோகித்தார்களா..**

இல்லை. முதல் தடவை என்பதனால், நாங்கள் கொடுத்த தகவல்களில் சுமார் 5 சதவீதம்தான் உபயோகிக்கக் கூடியதாக இருந்தது. எதிர்காலத்தில் எங்களின் பங்களிப்பு இன்னும் அதிகமாக இருக்கும். பார்வையாளர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து கொண்டு அதை படத்தில் வழங்கினால், அவர்களை நல்ல எதிர்பார்ப்புடன் படத்திற்கு அழைத்து வர முடியும். 'தனி ஒருவ'னில் எல்லாக் காட்சியும் புதிதாக இருப்பதற்கு நாங்கள் செய்த ஆய்வுகள் காரணம். அதனால்தான் 'படத்தில் டீட்டெயிலிங் இருப்பதற்கு நீங்களும் காரணம்' என மோகன் ராஜா பாராட்டினார்.

**அடுத்த படங்கள்..**

எதிர்பார்த்து இருக்கிறோம். நல்ல கதை, நல்ல தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் போது உடனடியாக ஆரம்பிப்போம்.

**அருளினியன்.**



வெற்றி மாறன் இயக்கத்தில் இன்னும் வெளிவராத தமிழ்த் திரைப்படமான 'விசாரணை' 72ஆவது வெனிஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு, மனித உரிமையை வலியுறுத்தும் சிறந்த படத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.

இந்தியச்சிறைகளில் கைதிகள் சந்திக்கும் இன்னல்களை மையமாகக் கொண்டு கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் மூலக்கதையை எழுதியவர் சந்திரகுமார் என்ற ஆட்டோ டிரைவர். கோவையைச் சேர்ந்த சந்திரகுமார் எழுதிய 'லாக்அப்' என்ற நாவலை தழுவித்தான் 'விசாரணை' படம் உருவாக்கப்பட்டுள்ளது.

வெனிஸ் திரைப்பட விழாவில் 'விசாரணை' படக் குழுவினரின் அறிமுக நிகழ்ச்சியில் ஆட்டோ டிரைவர் சந்திரகுமாரும் கலந்து கொண்டார். அவருடன் வெற்றி மாறன், சமுத்திரக்கனி ஆகியோரும் பங்கேற்றனர். சாதாரண ஆட்டோ ஓட்டுநரின் கதைக்கு வெனிஸ் திரைப்பட விழாவில் அங்கீகாரம் கிடைத்ததை அறிந்து கோவையிலுள்ள சந்திரகுமாரின் நண்பர்கள் மிகுந்த உற்சாகமடைந்து, கதாசிரியரை கௌரவிக்கும் வெற்றிமாறனின் உணர்வைப் போற்றி மகிழ்ந்தனர்.